பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
29-08-2025 FRIDAY 12 40 PM
ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பொருளாதார ஸ்திரத்தன்மை காரணமாக, இந்தியாவில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் பலமடங்கு அதிகரித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- உலக அளவில் செமிகண்டக்டர் துறையில் நிபுணர்களின் தேவையை இந்தியா பூர்த்தி செய்யும் என்று மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

- அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக, விளையாட்டுத் துறை புதிய உச்சத்தை அடைந்துள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

- காஸா மீது இஸ்ரேல் நடத்தி வரும் தொடர் தாக்குதலை நிறுத்த வேண்டும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் திரு. அன்டோனியோ குட்டரஸ் வலியுறுத்தியுள்ளார்.

- தாய்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>>><<<<<<<<<

பொருளாதார ஸ்திரத்தன்மை காரணமாக, இந்தியாவில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் பலமடங்கு அதிகரித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்

இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று காலை ஜப்பான் தலைநகர் டோக்கியோ சென்றடைந்த பிரதமர், இந்தியா – ஜப்பான் பொருளாதார அமைப்பின் கூட்டத்தில் பங்கேற்று பேசினார்.

இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் ஜப்பான் எப்போதும் முக்கியமான நாடாக திகழ்கிறது என்று குறிப்பிட்ட அவர், மெட்ரோ தொடங்கி உற்பத்தித் துறை வரையிலும், ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் முதல் செமிகண்டக்டர் துறை வரையிலும் இந்தப் பயணம் நீடிக்கிறது என்று கூறினார்.

*இந்தியாவில் ஜப்பானிய நிறுவனங்கள் 4 ஆயிரம் பில்லியன் டாலர் அளவிற்கு முதலீடுகளை செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.*

*முதலீட்டாளர்களின் நிதி பலமடங்கு அதிகரிப்பதற்கு இந்தியாவில் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை நிலவுவதே காரணம் என்று பிரதமர் பெருமிதம் தெரிவித்தார்.*

*மேலும், அரசின் வெளிப்படையான கொள்கைகளும் முக்கிய காரணமாக திகழ்கிறது என்று அவர் கூறினார்.*

*உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்று பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.*

*உலக நாடுகளுக்காக இந்தியாவில் தயாரிப்பதற்கு ஜப்பான் நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்றும் திரு. நரேந்திர மோடி அழைப்பு விடுத்தார்.*

*இந்நிகழ்ச்சியை அடுத்து, ஜப்பான் பிரதமர் திரு. Shigeru Ishiba-வுடன்வர்த்தகம், தொழில்நுட்பம், கலாச்சாரம் உட்பட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து திரு. நரேந்திர மோடி பேச்சு நடத்தவுள்ளார்.*

*இந்த பேச்சுவார்த்தையின் முடிவில், ஒப்பந்தங்களும் கையெழுத்தாக உள்ளன.*

*முன்னதாக, டோக்கியோ விமான நிலையத்தில் திரண்டிருந்த இந்திய வம்சாவளியினர் தேசியக்கொடியுடன் பிரதமருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.*

*>>>>>>>><<<<<<<<*

*உலக அளவில் செமிகண்டக்டர் துறையில் நிபுணர்களின் தேவையை இந்தியா பூர்த்தி செய்யும் என்று மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.*

*குஜராத் மாநிலம், அஹமதாபாத் அருகே செமிகண்டக்டர் உற்பத்தி ஆலையை தொடங்கி வைத்துப் பேசிய அவர், வரும் 2030ஆம் ஆண்டுக்குள் செமிகண்டக்டர் நிபுணர்களின் தேவை 10 லட்சமாக அதிகரிக்கும் என்று கூறினார்.*

*செமிகண்டக்டர் துறையில் நிபுணர்களை உருவாக்கி, வாய்ப்புகளை இந்தியா பயன்படுத்திக் கொள்ளும் என்று அமைச்சர் தெரிவித்தார்.*

உலகளாவிய செமிகண்டக்டர் இணைப்பை ஏற்படுத்துவதற்கு, திறமைவாய்ந்த நிபுணர்களை உருவாக்க இந்திய செமிகண்டக்டர் திட்டத்தை மத்திய அரசு ஏற்படுத்தியிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

செமிகண்டக்டர் வடிவமைப்பு துறையில், மாணவர்கள் தயாராகும் வகையில் 270 பல்கலைக் கழகங்களுடன் அரசு கூட்டாக இணைந்து பயிற்சி அளித்து வருவதாக திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<<<

தேசிய விளையாட்டு தினத்தை ஒட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இந்திய ஹாக்கி அணியின் முன்னாள் வீரர் மேஜர் தியான் சந்தின் பிறந்த தினம், ஆண்டுதோறும் தேசிய விளையாட்டு தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இதையொட்டி, பிரதமர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், விளையாட்டுத் துறைக்கு ஊக்கமளிக்கும் வகையில் நாட்டில் பல்வேறு கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்தியாவை உலக அளவில் விளையாட்டுத் துறையில் முன்னேற்றுவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருப்பதுடன், தடகள வீரர்களுக்கு தொடர்ந்து ஆதரவளிக்க அரசு உறுதிபூண்டுள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், சமரசமற்ற - அர்ப்பணிப்புடன் கூடிய கடின உழைப்பால் தியான் சந்த், இன்றளவும் நினைவுகூரப்படுவதாக தெரிவித்துள்ளார்.

இந்திய ஹாக்கி அணியை உலக அளவில் கொண்டு சென்ற பெருமை அவரைச் சேரும் என்று திரு. அமித் ஷா அதில் குறிப்பிட்டுள்ளார்.

விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தமது வாழ்த்துப் பதிவில், இந்த நாளில் இந்தியா அதிநவீன செயற்கைஇழையுடன் கூடிய மாண்ட்டோ மைதானம் உருவாக்கப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

புதிய மைதானம், இந்திய தடகள வீரர்களுக்கு உலக தரத்திலான வசதிகளை அளிக்கும் என்று திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள வாழ்த்துப் பதிவில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, விளையாட்டுத் துறை புதிய உச்சத்தை அடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

*>>>>>>>><<<<<<<<<*

ரிசர்வ் வங்கியின் முன்னாள் கவர்னர் திரு. உர்ஜித் பட்டேல், சர்வதேச பண நிதியத்தின் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பணியாளர் நியமனத்திற்கான அமைச்சரவைக் குழு இதற்கான ஒப்புதலை அளித்துள்ளது.

அவர் இந்தப் பதவியை மூன்றாண்டுகள் வகிப்பார் என்று மத்திய பணியாளர் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*>>>>>>>><<<<<<<<<*

உச்சநீதிமன்ற புதிய நீதிபதிகளாக திரு. *Alok Aradhe* மற்றும் திரு. *Vipul Manbhai Pancholi* இன்று பதவியேற்றுக் கொண்டனர்.

அவர்களுக்கு, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. *B.R. Gavai* பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

இந்த நீதிபதிகள் பதவியேற்றதை அடுத்து, உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை *34* ஆக உள்ளது.

*>>>>>>>><<<<<<<<<*

நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக உள்ளடக்கத்திற்கான சக்திவாய்ந்த கருவியாக பொதுத்துறை நிறுவனங்கள் திகழ்கிறது என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று பொதுத்துறை நிறுவனங்களுக்கான *2022-23*ஆம் ஆண்டின் *SCOPE* விருதுகளை வழங்கி அவர் பேசினார்.

தொழில்மயமாக்கல், கட்டமைப்பு வளர்ச்சி, சமூக மேம்பாடு ஆகியவற்றுக்கு பொதுத்துறை நிறுவனங்கள் அடித்தளத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<<<

பீகார் மாநிலத்தில் வாக்காளர் சிறப்பு திருத்தப் பட்டியலில் குடியுரிமை தொடர்பாக விளக்கமளிக்குமாறு 3 லட்சம் பேருக்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியின் போது, தங்களின் ஆவணங்களை அளிக்காததன் காரணமாக, அவர்களுக்கு இந்த நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அவர்களில் பெரும்பாலானோர் பங்களாதேஷ் மற்றும் நேபாளத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடும் என சந்தேகம் எழுந்துள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<<<

காஸா மீது இஸ்ரேல் நடத்தி வரும் தொடர் தாக்குதலை நிறுத்த வேண்டும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் திரு. அன்டோனியோ குட்டரஸ் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டம் தொடங்கவிருப்பதை முன்னிட்டு, செய்தியாளர்களிடம் பேசிய அவர், காஸா நகரை ராணுவ ரீதியில் கைப்பற்ற இஸ்ரேல் மேற்கொள்ளும் நடவடிக்கைகளால், மிக மோசமான விளைவுகள் ஏற்படக்கூடும் என்று தெரிவித்தார்.

ஏற்கனவே, ஆயிரக்கணக்கான மக்கள் காஸா நகரை விட்டு வெளியேறியிருப்பதுடன். பலர் பாதிக்கப்பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது, இஸ்ரேல் தாக்குதல் தொடர்ந்து நீடித்தால், மேலும் ஆயிரக்கணக்கானோர் காஸா நகரை விட்டு வெளியேறக்கூடும் என்பதால், தாக்குதலை நிறுத்த வேண்டும் என்று திரு. அன்டோனியோ குட்டரஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>>>><<<<<<<<<

தேசிய கண்தான விழிப்புணர்வு இருவார விழா, கடந்த 25ஆம் தொடங்கி அடுத்த மாதம் 8ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

இதையொட்டி, நாடுமுழுவதும் கண்தானம் குறித்த பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தின் வேலூரில் நூற்றுக்கும் மேம்பட்டோர் பங்கேற்ற மனிதச் சங்கிலியை மாவட்ட ஆட்சியர் திருமதி. சுப்புலெட்சுமி தொடங்கி வைத்தார்.

>>>>>>>><<<<<<<<

அருணாச்சலப் பிரதேசம், உத்ராகண்ட், கடலோர கர்நாடகா, மஹாராஷ்ட்ராவின் மத்தியப்பகுதிகளின் ஓரிரு இடங்களில் இன்று, கன முதல் மிக கனமழை வரை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குஜராத், கேரளா, மாஹே, கொங்கன், கோவா, சிக்கிம், மேற்குவங்கம், தெலங்கானா, விதர்பா பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே, தமிழகத்தின் நீலகிரி, கோவை மாவட்டங்களில் நேற்று பரவலாக கனமழை பெய்துள்ளது.

இந்நிலையில், வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பாக, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மழைநீர் வடிகால் பணிகள் முழுமையாக நிறைவடையும் என்று மாநில அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<<<

தாய்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 6-3, 6-0 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் Pawit Sornlaksup-ஐ வென்றார்.

>>>>>>>><<<<<<<<

ஆசிய கோப்பை ஹாக்கிப் போட்டி, பீகார் மாநிலம், ராஜ்கீரில் இன்று தொடங்கியது.

இந்தியா தனது முதல் ஆட்டத்தில் சீனாவை எதிர்கொள்கிறது.

இப்போட்டி பிற்பகல் 3 மணிக்கு தொடங்குகிறது.

>>>>>>>><<<<<<<<

***ஆசிய கோப்பை சைக்கிளிங் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Harshida Jakhar வெள்ளிப்பதக்கம் வென்றார்.***

***தாய்லாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஜூனியர் மகளிர் பிரிவில் அவர், இப்பதக்கத்தை கைப்பற்றினார்.***

*>>>>>>>>><<<<<<<<<*

***ப்ரோ கபடி லீக் போட்டி இன்று தொடங்குகிறது.***

***விசாகப்பட்டிணத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் தமிழக அணி – தெலுகு அணியையும், பெங்களூரு – புனே அணியையும் எதிர்கொள்கின்றன.***

***>>>>>>>>>END<<<<<<<<<<***